1979 நவம்பர் 2] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

கடன் வசூல் என்பது, அரசும், அரசைச் சார்ந்த கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கிய கடன் வசூல் செய்வதில்தான் இப்படிப்பட்ட ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுபோன்ற எல்லா விவரங்களையும் என்னுடைய கவன ஈர்ப்பில் தெரிவித்திருக்கிறேன். அமைச்சரின் செயலர் அதுபற்றி எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவில்லை. மழை இல்லை என்று சொன்னால் அதுபற்றி அரசாங்கத்திற்கு தகவல் இல்லை என்று சொல்கிறார்கள்; ஆச்சரியமாக இருக்கிறது. நேற்றும் இன்றும்தான் மழை பெய்திருக்கிறது. அதற்கு முன்னால் மழை இல்லை. விதை வாங்கக்கூட காசில்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்தி நடவடிக்கைகளை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய புகார் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவினை' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.